Australian Government
Department of Home Affairs



Domestic and Family Violence Visa Support

# இல்ல மற்றும் குடும்ப வன்முறையும் உங்களுடைய விசாவும்

- இல்ல மற்றும் குடும்ப வன்முறை என்பது ஆஸ்திரேலியாவில் ஒரு குற்றம், மற்றும் எவ்வொரு சூழலிலும் இது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.
- எவ்வொரு சூழலிலும், விசா முடிவு ஒன்றை எதிர்பார்த்து துஷ்ப்பிரயோகம் இழைக்கப்படும் உறவு ஒன்றில் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று விசா வைத்திருப்பவர்களை நாங்கள் ஊக்குவிப்பதில்லை.
- விசா இரத்து செய்யப்படும் தருணங்கள் சிக்கலானவை, மற்றும் ஒவ்வொரு தனி-நபர் அடிப்படையில் அவை கருத்தில் கொள்ளப்படுகின்றன.
- ஒருவருக்கு விசா வழங்குவதற்கான, அல்லது ஒருவருடைய விசாவை இரத்து செய்வதற்கான அதிகாரம் அமைச்சருக்கு, அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரி (‘திணைக்களம்’) ஒருவருக்கு மட்டுமே உள்ளது. இல்ல மற்றும் குடும்ப வன்முறையை இழைக்கும் நபர் ஒருவரால் ஒருவருடைய விசாவை இரத்து செய்ய இயலாது.
- இல்ல மற்றும் குடும்ப வன்முறையை இழைக்கும் நபர் ஒருவருக்கு விசா மறுக்கப்படலாம், அல்லது அவருடைய விசா இரத்து செய்யப்படலாம்.
- Visa Entitlement Verification Online (VEVO) (‘இணைய-வழி- விசா உரிம சரிபார்ப்பு’) முலமாக இணைய-வழியில் உங்களுடைய விசா தகு-நிலை என்ன என்பதை நீங்கள் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். நீங்கள் வைத்திருக்கும் விசா எது, அது எப்போது இறுதியுறுகிறது, மற்றும் அந்த விசாவிற்கான நிபந்தனைகள் ஏதும் இருந்தால் அவை என்ன என்பதை VEVO உங்களுக்குக் காண்பிக்கும்.
    - பாருங்கள்: immi.homeaffairs.gov.au/visas/already-have-a-visa/check-visa-details-and-conditions/overview
- உங்களுடைய விசாவைப் பற்றிய முக்கியமான தகவல்களை நாங்கள் உங்களுக்குத் தெரிவிக்க இயலும் வகையில், உங்களைப் பற்றிய நடப்பு-நாள் வரைக்கும் சரியான தகவல்கள் ‘திணைக்கள’த்திடம் இருக்கவேண்டும் என்பது முக்கியம்.

- தற்போதைய அல்லது எதிர்கால விசா விண்ணப்பங்கள் எதையும் நீங்கள் நிர்வகிக்க இயலும் இடமான ImmiAccount ஒன்று உங்களுக்கு இருக்கிறது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். உங்களால் மட்டுமே அணுக இயலுமான தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல் ஒன்றுடன் இது ஏற்படுத்தப்படவேண்டும் என்பது முக்கியம்.
    - பாருங்கள்: online.immi.gov.au
- குடிவரவு செயல்பாட்டு முறைமைகளின் ஊடாகச் செல்வது சிரமமானதாக இருக்கக்கூடும், ஆகவே, பதிவு பெற்ற புலபெயர்வு முகவர் அல்லது சட்டதரணி ஒருவரிடமிருந்து உதவி நாடுமாறு உங்களை ஊக்குவிக்கிறோம். சில சேவை வழங்குநர்கள் இல்ல மற்றும் குடும்ப வன்முறையிலும், புலபெயர்வுப் பிரச்சினைகளிலும் சிறப்புத்துவம் பெற்றவர்களாவர்.
    - பாருங்கள்: immi.homeaffairs.gov.au/help-support/who-can-help-with-your-application/overview
    - பாருங்கள்: familyviolencelaw.gov.au/
- நிரந்தர விசா வழங்கபடுவதற்காக, குடும்ப வன்முறை சம்பந்தப்பட்ட சிறப்பு ஏற்பாடுகளின் (குடும்ப வன்முறைகுறித்த ஏற்பாடுகள்) கீழ் கருத்தில் கொள்ளப்படுவதற்காக குறிப்பிட்ட சில வாழ்கைத்துணை விசா வைத்திருப்பவர்களும் அதற்கான விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.
    - பாருங்கள்: immi.homeaffairs.gov.au/visas/domestic-family-violence-and-your-visa/how-we-can-help
- உங்களுடைய விசா தகு-நிலையைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால், உங்களுடைய விசா தகு-நிலைக்குத் தீர்வு காண நாங்கள் உங்களுக்கு உதவவும், ஆதரவுதவி சேவைகளைப் பற்றிய தகவல்களை உங்களுக்குக் கொடுக்கவும் இயலும் வகையில், 'திணைக்கள'த்துடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

*மேலதிகத் தகவகளுக்கு, பாருங்கள்:*
*immi.homeaffairs.gov.au/visas/domestic-family-violence-and-your-visa*